2007 ஜனவரி 23]

தொகுதியிலிருந்து சென்னை திநகர் வரையிலும் அதேபோன்று மறைமலை நகரிலிருந்து சென்னை தி. நகருக்கும் புதியதாகப் பேருந்து வழித் தடங்களை உருவாக்கி, அதில் புதிய பேருந்துகளை விட்ட டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோன்று மாவட்டச் செயலாளர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், திருப்போரூர் தொகுதி மக்களின் நன்றியையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னுடைய கேள்வி..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் கேள்வி கேட்காமல், எதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்?

திரு. டி. மூர்த்தி: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேள்வி கேளுங்கள்.

திரு. டி. மூர்த்தி: திருப்போரூர் தொகுதி பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நெமிலி—திருப்போரூர் இடையே பக்கிங்காம் கால்வாய்மீது மேம்பாலம், நெடுஞ்சாலைத் துறை மூலமாக அமைத்துத் தரப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மூலக்கேள்வி ஒசூர்—தளி சாலையிலுள்ள பாலம் கட்டும் பணிக்கானது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிக் கேள்வி எழுப்பினால் உரிய பதில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

அடிப்படை வசதிகள்

***537—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2007 ஜனவரி 23

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதியில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய, அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

பால் கறவை மையம்

***6881—திரு. செ. சின்னசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் உள்ள பாலகருதம்பட்டி கிராமத்தில் பால் கறவை மையம் அமைக்கப்பட்டு, 1–8–2006 முதல் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இக்கறவை மையத்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 129 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் வேறொரு பால் கறவை மையம் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிற பாலுக்கு விலை உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY